<table>
<tr><td colspan="3"><u>இராணிப்பேட்டை நகராட்சி</u><br><br><u>2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25–ஆம் நாள் செவ்வாய்கிழமை பிற்பகல் 4.30 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்</u><br><u>தலைமை :– தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்</u></td></tr>
<tr><td>மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள்</td><td>வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள்</td><td>மன்றத்தின் தீர்மானம்</td></tr>
<tr><td>25.01.2022</td><td><u>பொருள் எண். 1</u><br>இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் டிசம்பர் 2021 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :–</u><br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.1308/2015/சி1)</td><td>நகர்மன்றத் தீர்மான எண். 1<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>25.01.2022</td><td><u>பொருள் எண். 2</u><br>இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர் 2021 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :–</u><br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.675/2015/சி1)</td><td>நகர்மன்றத் தீர்மான எண். 2<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>25.01.2022</td><td><u>பொருள் எண். 3</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 30 வார்டு பகுதிகளில் டெங்குகாய்ச்சல் தடுப்பு நடவடிக்கைள் மேற்கொள்ளும் பொருட்டு அதற்கு தேவையான கொசுப்புழு ஒழிப்பு மருந்து பைரித்திரம் 2% எக்ஸ்ட்ராக்ட் மருந்து 100 லிட்டர் அளவு மற்றும் அபேட் மருந்து 100 லிட்டர் அளவு அறிவிக்கப்பட்டுள்ளவாறு அரசு (TNMSC) அங்கீகரித்துள்ள நிறுவனத்திடமிருந்து வாங்கிஇருப்பில் வைத்து உபயோகிக்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.2,00,000/–த்திற்கும் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :–</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்</td><td>நகர்மன்றத் தீர்மான எண். 3<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | 2) மேற்படி பைரித்திரம் 2% எக்ஸ்ராக்ட் மருந்து 100 லிட்டர்அளவு மற்றும் அபேட் மருந்து 100 லிட்டர் அளவு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் நேரடியாக பெற்றுக்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி செலவினம் இந்நகராட்சி 2021–2022 ஆம் ஆண்டுபொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2309/2022/எச்1)** | |
| 25.01.2022 | **<u>பொருள் எண். 4</u>**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகரில் தினசரி உருவாகும் 17 மெட்ரிக்டன் திடக்கழிவுகளில் 4100 டன் கழிவுகள் எதற்கும் பயன்படுத்தாத கழிவுகளாக பிளாஸ்டிக் பிரிக்கப்படுகின்றது. எதற்கும் பயன்படுத்தாத பிளாஸ்டிக் கழிவுகள் எடுத்து செல்லும் நிறுவனம் ஆன பெப்பர் மேன் கலோஷன் நிறுவனம் மூலம் அவ்வப்போது லாரி மூலம் எடுத்து செல்லப்படுகின்றது. மேற்படி லாரியில் ஏற்றுவதற்கு ஜே.சி.பி. வாகனம் பயன்படுத்தபடுகின்றது. மேற்படி வாகனத்திற்கான செலவு ஒரு மணி நேரத்திற்கு ரூ.1200/– ஆகின்றது. தோராயமாக ஓர் லோடு ஏற்றுவதற்கு 5 மணி நேரம் தேவைப்படுகின்றது. (5X1200=ரூ.6000) செலவாகின்றது. எனவே, மேற்படி பணி மேற்கொள்ள தேவைப்படும் ஜே.சி.பி வாகனத்தை ஒப்பந்தப்புள்ளி கோரி தேவைப்படும் போது பயன்படுத்தி கொள்ளவும் அதற்காகும் ஆகும் தோராய செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி பொதுசுகாதாரப்பணி பாதிக்காமல் இருக்க ஜே.சி.பி வாகனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>3. மேற்படி தொகையினை இந்நகராட்சி 2021 –2022 பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண். 4 அனுமதிக்கப்பட்டது. |
| 25.01.2022 | **<u>பொருள் எண். 5</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளில் டெங்கு காய்சல் பரவாமல் தடுக்க காய்ச்சல் கணக்கெடுப்புப்பணி கொசுப்புழு உருவாகும் இடங்களை கணிடறிந்து அழித்தல், அபேட் கரைசல், ஊற்றுதல், Indoor, Outdoor பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், காய்ச்சல் கண்டுபிடிப்பு மருத்துவ முகாம்கள் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது மற்றும் டெங்கு காய்ச்சல் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், மேற்படி பணியினை கண்காணித்து வரும் 45 DBC பணியாளர்ளுக்கு இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.RCF4/4406/2021 நாள் 11.06.2021–ன் படி நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி அடிப்படையில், வரிசை எண்.24–ல் உள்ள படி ரூ.304/– (நாள் ஒன்றுக்கு) நிர்ணயம் செய்யவும் 45 DBC பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.50.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண். 5 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br>2. மாவட்ட ஆட்சித் தலைவர், இராணிப்பேட்டை அவர்கள் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி ரூ.304/-னை (நாள் ஒன்றுக்கு) இந்நகராட்சியில் பணிபுரியும் 45 DBC பணியாளர்களுக்கு வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3. மேற்படி செலவினத் தொகையினை 2021-2022 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 25.01.2022 | **<u>பொருள் எண். 6</u>**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனம் TN73Q6664-க்கு தகுதிச்சான்று பெற கட்டணம் ரூ.650/- வேககட்டுப்பாட்டு கருவி பொறுத்த ரூ.1770/- மற்றும் Pollution சான்று மற்றும் ஸ்டிக்கர் ஒட்ட ரூ.900/- ஆக மொத்தம் ரூ.3320/-னை திரு.ஜி.வாசுதேவன், ஓட்டுநர், செலுத்தியுள்ளதாக 10.01.2022 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>2) மேற்படி தொகையினை 2021-2022 ஆண்டு பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>**(ந.க.எண்.654/2021/எச்1)** | நகர்மன்றத் தீர்மான எண். 6 அனுமதிக்கப்பட்டது. |
| 25.01.2022 | **<u>பொருள் எண். 7</u>**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனம் TN73Q6664 -க்கு பேட்டரி பழுதடைந்துள்ளதால் புதியதாக பேட்டரி வாங்க ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.5000/-க்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. மேற்படி பேட்டரியினை வாங்க விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3. மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.2428/2021/எச்1)** | நகர்மன்றத் தீர்மான எண். 7 அனுமதிக்கப்பட்டது. |
| 25.01.2022 | **<u>பொருள் எண். 8</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மைப்பணியாளர்கள் தினசரி கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைப் பணிகள் மேற்கொள்ளத் தேவையான பாதுகாப்பு உபகரணமான முகக்கவசம் - 25000 எண்ணிக்கை, கையுறை -25000 ஜோடிகள், லைசால் -200 லிட்டர், சோடியம் ஹைப்போகுளோரைடு -1000 லிட்டர், பி.பி.கிட் -200 எண்ணிக்கை கிருமிநாசினி - 50 லிட்டர் மற்றும் Hand Sprayer -5 எண்ணிக்கை ஆகியவற்றினை வாங்குவதற்காகும் தோராயச் செலவினம் ரூ.9,00,000/- | நகர்மன்றத் தீர்மான எண். 8 அனுமதிக்கப்பட்டது. |

இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படிசெலவினம் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்தும் மற்றும் பொதுநிதியிலிருந்தும் செலவு செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்.1203/2021/எச்1)**

---

25.01.2022

**<u>பொருள் எண். 9</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் கொரோன வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தேவையான உபகரணங்கள் சப்ளை செய்யக் கோரி 12.01.2022–ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. அதனடிப்படையில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பொருளின் பெயர் | முகக் கவசம் ரூ. | கையுறை ரூ. | லைசால் ரூ. | சோடியம் ஹைபோ குளோரைடு ரூ. | பிபி.கிட் ரூ. | Hand Sanitaizer ரூ. | Hand Sprayer ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Ever Green Far Trade Pvt Limited, No.18/26, 2nd Street, Loganadan Nagar, Cholaimadu, Chennai | 4.48 | 15.75 | 236 | 6.00 | 292 | 590 | 9900 |
| 2 | K.M. Poly Packs, No.1/1424/5 Vetrilaioorani Road, Viswanadham, Sivakasi. | 5.50 | 16.25 | 245 | 6.50 | 300 | 620 | 10000 |
| 3 | Madhavan Bags, | 6.00 | 16.50 | 250 | 7.00 | 320 | 650 | 10100 |

நகர்மன்றத் தீர்மான எண். 9 அனுமதிக்கப்பட்டது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | No.1/1424/5 Vetrilaioorani Road, Viswanadham, Sivakasi. | | | | | | | |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள **Ever Green Far Trade Pvt Limited, Chennai** அவர்களின் குறைந்த விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்
2) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் **Ever Green Far Trade Pvt Limited, Chennai** அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை 2021–2022 ஆம் ஆண்டு பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்.1203/2020/எச்1)**

25.01.2022

**பொருள் எண். 10**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 30 வார்டுகளில் உள்ள வீடுகளில் உள்ள மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை பிரித்து வாங்க பயன்படுத்தப்படும் 250 பின்கள் சப்ளை செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்ததப்புள்ளிகள் வரப்பெற்றது. ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | எஸ். புவனேஷ்வரி, எண்.3, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் தெரு, பஸ்டாண்டு காம்ப்ளக்ஸ், கே.எஸ். ஏ. ஆர். ரோடு, நெல்லிக்குப்பம் , கடலூர். | ரூ.1450.22/– (ஒரு பின்) |
| 2 | ஜி. எஸ். அசோசியேட்ஸ், எண்.22, பாடி கலையரங்கம், பீச் ரோடு, கடலூர். | ரூ.1512/– (ஒரு பின்) |

**அலுவலக குறிப்பு :–**

நகர்மன்றத் தீர்மான எண். 10 அனுமதிக்கப்பட்டது.

<table>
<tr>
<td></td>
<td>
1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் கண்டுள்ள எஸ். புவனேஷ்வரி, நெல்லிக்குப்பம், கடலூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
3) மேற்படி தொகையினை 2021-2022 ஆண்டு பொதுநிதியிலிருந்து வழங்க அனுமதி அளிக்கலாம்.<br>
(ந.க.எண்.2454/2021/எச்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>25.01.2022</td>
<td>
<u>பொருள் எண். 11</u><br>
புதியதாக தோற்றுவிக்கப்பட்ட 9 மாவட்டங்களைச் சேர்ந்த நகராட்சிகளுக்கு வார்டு எல்லை மறுவரையறை செய்யப்பட்டு, அறிக்கை வெளியிடப்பட்டதை அடுத்து அரசாணை எண். 121, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள் 07.12.2021-ல் நகரமன்ற உறுப்பினர் பதவிக்கான இடஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அரசாணை தமிழ்நாடு மாநில அரசிதழ் எண்.584, 07.12.2021-ல் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. நடைபெறவுள்ள நகர்புற உள்ளாட்சி தேர்தலில் இந்த அரசாணையின்படி இடஒதுக்கீடு பின்பற்ற வேண்டியுள்ளது. இதன் பொருட்டு மேற்கண்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>மாவட்டம்</th><th>நகராட்சியின் பெயர்</th><th>மொத்த வார்டுகள்</th><th>SC(G)</th><th>SC(W)</th><th>ST(G)</th><th>ST(W)</th><th>W(G)</th></tr>
<tr><td>1</td><td>இராணிப்பேட்டை</td><td>இராணிப்பேட்டை</td><td>30</td><td>9,10,12, 20,22</td><td>2,11,16 17,18</td><td>0</td><td>0</td><td>1,6,7 13,14, 15,21, 23,26, 27</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
மன்றம் பதிவு செய்யலாம்.<br>
(ந.கஎண்.1159/2021/சி1)
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 11 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>25.01.2022</td>
<td>
<u>பொருள் எண். 12</u><br>
இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 'சி' பிளாக் '06' நகரளவு எண். 12/1சி கொண்ட இடத்தில் நகர் ஊரமைப்பு துறை, இராணிப்பேட்டை மண்டலம் அவர்களின் 11.08.2021 தேதிய கடிதம் ந.க.எண்.1052/2021/ரா.மா -ல் பெறப்பட்ட கடிதம் மற்றும் மனைப்பிரிவு வரைப்படம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் பொருள் வைக்கப்டுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :</u>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 12 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>இராணிப்பேட்டை நகராசி எல்லைக்குட்பட்ட வார்டு 'சி' பிளாக் '6' நகரளவு எண்12/2சி கொண்ட இடத்தில் புதியதாக 36 குடியிருப்பு மனைகள் கொண்ட மனைப்பிரிவு ஏற்படுத்த 1.திரு.எஸ்.கிருஷ்ணன், த/பெ.திரு.சீனிவாசன் (ம) 2.திரு.எஸ்.ஜெய்நுருல்லாபுதீன் த/பெ.ஸாபுதீன், ஆகியோரிடமிருந்து 02.07.2018 அன்று பெறப்பட்ட விண்ணப்பம் மற்றும் மனைப்பிரிவு வரைப்படங்கள் நகர் ஊரமைப்பு துறை, வேலூர் (ம) இராணிப்பேட்டை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.<br><br>அதன் பேரில் நகர் ஊரமைப்பு துறை, இராணிப்பேட்டை மண்டலம் அவர்களின் 01.07.2021 தேதிய கடிதம் ந.க.எண்.1052/2021/ரா.மா– ல் மேற்படி மனைப்பிரிவில் அமையவுள்ள பொது இடம் சாலைகள் (ம) பூங்கா இடங்களை குறியிட்டு முதற்கட்ட தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு தானபத்திர எண்.5438/2021, நாள் 08.07.2021 –ல் பொது இடம், சாலைகள் (ம) பூங்கா இடங்கள் நகராட்சி ஆணையாளர் பெயரில் தானமாக பெறப்பட்டது.<br><br>இதனைத் தொடர்ந்து நகர் ஊரமைப்பு துறை இராணிப்பேட்டை மண்டலம் அவர்களின் 11.08.2021 தேதிய கடிதம் ந.க.எண்.1052/2021/ரா.மா–ல் மேற்படி மனைப்பிரிவில் 36 மனைகள் கொண்ட மனைப்பிரிவிற்கு ம.வ/மா.ந.ஊ.உ.இ(ரா.மா) எண்.70/2021 என எண்ணிட்டு உரிய நிபந்தனைகளுடன் மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதியின் பேரில் இம்மனைப்பிரிவிற்கான அடிப்படை மற்றும் அபிவிருத்தி பணிகளான சாலை, மழைநீர் வடிகால், சிறுபாலம், குடிநீர் மற்றும் தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைத்த விவரம் குறித்து பொறியியல் பிரிவில் அறிக்கை கோரப்பட்டு 21.01.2022 (ம) 24.01.2022 ஆகிய தேதிகளில் பொறியியல் பிரவிலிருந்து பெறப்பட்ட அறிக்கையின் பேரில் 07 தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைக்க ரூ.1,40,000/– (எழுத்தால் ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பது ஆயிரம் மட்டும் ) நகராட்சி கருவூலத்தில் செலுத்துச் சீட்டு எண்.0023208, நாள். 21.01.2022 அன்று செலுத்தப்பட்டதின் பேரில் மனுதாரர்கள் 1.திரு.எஸ்.கிருஷ்ணன், த/பெ.திரு.சீனிவாசன் (ம) 2.திரு.எஸ்.ஜெய்நுருல்லாபுதீன் த/பெ.ஸாபுதீன், ஆகியோரின் 36 மனுக்களுக்கு மனைப்பிரிவு அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1283/2021/எப்1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>25.01.2022</td>
<td><u>பொருள் எண். 13</u><br>இந்நகராட்சிக்கு சொந்தமான வருடாந்திர குத்தகை இனங்களுக்கு 2021–2022 முதல் மூன்றாண்டுகளுக்கு அனுபவித்துக்கொள்ள உரிமத்திற்கு குத்தகை 4 இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொதுஏலம் 21.01.2022 அன்று கோரப்பட்டது. மேற்கண்ட 4 இனங்களுக்கு அன்றைய தினம் ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. மேலும் கீழ்க்கண்டுள்ளவாறு ஏலத்தில் கலந்துக்கொண்டு உயர்ந்த ஏலக்கேள்வி கேட்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><table><tr><td>வ.எண்.</td><td>குத்தகை இனம்</td><td>ஏலத்தில்</td><td>கேட்கப்பட்ட</td></tr></table></td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 13 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | கலந்துகொண்டவர்கள் பெயர்கள் | உயர்ந்த ஏலக்கேள்வி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | பாலார் தண்ணீர் தொட்டி | – | ஏலம் கோர எவரும் முன்வரவில்லை |
| 2 | பேருந்து நிலையம் | – | ஏலம் கோர எவரும் முன்வரவில்லை |
| 3 | மாடு தொட்டி சுங்கம் | 1)திரு.ஏ.பஞ்சாட்சரம்<br>2)திரு.டி.ராஜுவ்காந்தி | ரூ.75000/–<br>ரூ.74000/– |
| 4 | புதியதாக கட்டப்பட்டுள்ள மீன் விற்பனை அங்காடி சுங்கம் | – | ஏலம் கோர எவரும் முன்வரவில்லை |

<u>**அலுவலக குறிப்பு :–**</u>

1) வரிசை எண்.3–ல் கண்டுள்ள மாடு தொட்டி சுங்கம் குத்தகை இனத்திற்கு திரு.ஏ.பஞ்சாட்சரம் என்பவருக்கு ரூ.75000/– க்கு உயர்ந்த ஏலக்கேள்வி கேட்டுள்ளார். மேற்படி திரு.ஏ.பஞ்சாட்சரம் என்பவரின் உயர்ந்த ஏலக்கேள்வி தொகை ரூ. 75000/– மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2) மேற்குறிப்பிட்டுள்ளவரிசை எண்.1,2 மற்றும் 4 ஆகிய இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் எவரும் கலந்துக்கொள்ளாததால் குறுகிய கால மறு ஒப்பந்தப்புள்ளிமற்றும் மறு ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3232/2020/அ3)**

---

25.01.2022

<u>**பொருள் எண். 14**</u>

இராணிப்பேட்டை நகராட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021–2022ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தனது தொகுதியில் மேற்கொள்ள பரிந்துரைசெய்த பணிகளுக்கு இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெருந்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்அ4/2622/2021 நாள் 10.01.2022ல் நிர்வாக அனுமதி அளித்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் |
|---|---|---|

நகர்மன்றத் தீர்மான எண். 14 அனுமதிக்கப்பட்டது.

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>இராணிப்பேட்டை நகராட்சி வார்டு எண் 5 மறறும் 7 கிரேஸ் பள்ளித்தெரு, பரிய தெரு, மியான்சாகிப் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் கட்டுதல் & காவலர் குடியிருப்பு பகுதியில் 90mm PVC Pipe குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணி.</td><td>4.80</td></tr>
<tr><td>2</td><td>இராணிப்பேட்டை நகராட்சி வார்டு எண் 27 பாரிநகர் விரிவு வடக்கு முதல் குறுக்கு தெரு மற்றும் வார்டு எண் 14 TMN தெருக்களுக்கு சிமெண்ட்சாலை, மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி செய்தல்.</td><td>9.90</td></tr>
<tr><td>3</td><td>இராணிப்பேட்டை நகராட்சி ஆ,எஸ்.ரோடு வண்டிமேட்டுத்தெரு, மெயின்ரோடு, சந்திப்பு பகுதியில் 70/90 Watts LED தெருவிளக்கு புதியதாக வாங்கி பொருத்தும் பணிசெய்தல்.</td><td>9.95</td></tr>
<tr><td>4</td><td>இராணிப்பேட்டை நகராட்சி இரயில்வே ஸ்டேஷ்ன் தெரு, (இராணிப்பேட்டை நகராட்சியின் முன்பகுதி) வண்டிமேட்டுத்தெரு ஆகிய இடங்களில் புதியதாக புதை கேபிள்கள் அமைத்தல்.</td><td>6.50</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1) மன்றம் பதிவு செய்யலாம்<br>
2) மேற்படி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் தொடர் நடவடிக்கைகள மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம் .<br>
(ந.க.எண்.051/2022/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>25.01.2022</td>
<td><u>பொருள் எண். 15</u><br>
இராணிப்பேட்டை நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2021–22 கட்டிமான்யம் (Tied Grant ) –ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவு நீர் டேங்கர் லாரி கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கையினை மாநில அளவில் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான கட்டணத்தொகை ரூ.45410/– வழங்ககோரி மேற்படி விளம்பரம் செய்த M/S.ACCORD ADVERTISING AGENCIES, CHENNAI –34 நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 15 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) விளம்பர கட்டணத்தொகை ரூ.45410/- மேற்படி திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2068/2021/இ1) | |
| 25.01.2022 | **<u>பொருள் எண். 16</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2021-22 கட்டிமான்யம் (Tied Grant ) -ன் கீழ் மூன்று எண்ணிக்கையிலான குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கையினை மாவட்ட அளவில் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான கட்டணத்தொகை ரூ.1612/- வழங்ககோரி மேற்படி விளம்பரம் செய்த M/S . BRIGHT ADVERTISING , CHENNAI -06 நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) விளம்பர கட்டணத்தொகை ரூ. 1612/- மேற்படி திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2068/2021/இ1) | நகர்மன்றத் தீர்மான எண். 16 அனுமதிக்கப்பட்டது. |
| 25.01.2022 | **<u>பொருள் எண். 17</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2021-22 சுகாதார பிரிவு மான்யம் NHM-ன் கீழ் நகர்புற சுகதாரநலமையம் (U-HWC) கட்டடம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கையினை மாவட்ட அளவில் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான கட்டணத்தொகை ரூ.3024/- வழங்ககோரி மேற்படி விளம்பரம் செய்த M/S . BRIGHT ADVERTISING CHENNAI -06 நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) விளம்பர கட்டணத்தொகை ரூ. 3024/- மேற்படி திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2359/2021/இ1) | நகர்மன்றத் தீர்மான எண். 17 அனுமதிக்கப்பட்டது. |
| 25.01.2022 | **<u>பொருள் எண். 18</u>** | நகர்மன்றத் தீர்மான |

<table>
<tr>
<td></td>
<td>15வது நிதிகுழுமான்யம் (Tied Grant 2021 2022) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் கீழ் ரூ.2600000/– மதிப்பீட்டில் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திற்கு ஊடுருவல் கிணறு எண் 4 மற்றும் 5ற்கு 1500 மீட்டர் பைப்லைன் அமைக்கவும் 20 எச்.பி நீர்முழுகி மோட்டார்களை புதியதாக வாங்கி பொருத்தவும் நகரமன்ற தீர்மானம் எண்.751 நாள் 08.12.2021–ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 11.01.2022 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>ஒப்பந்ததாரர்</th><th>சதவீகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.டி.கணேஷ்<br>காட்பாடி</td><td>மதிப்பீட்டை விட<br>0.07% குறைவு</td></tr>
<tr><td>1</td><td>M/s.மணிமோட்டரஸ்அன்டு டிரேடர்ஸ்,<br>நெ.1எ5,தெர்மல் போர் ரோடுஸ்,<br>தெர்மல் முதல் பாலம் அருகில்<br>மேட்டூர் டேம் 636401</td><td>மதிப்பீட்டை விட<br>0.47% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>
2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1–ல் கண்டுள்ள திரு.டி.கணேஷ் ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண் . 2068/2021/இ1)</td>
<td>எண். 18<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>25.01.2022</td>
<td><u>பொருள் எண். 19</u><br>
15வது நிதிகுழுமான்யம் (Tied Grant 2021 2022) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் கீழ் ரூ.3800000/– மதிப்பீட்டில் இராணிப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமாக கழிவு நீர் டேங்கர் லாரி ஒன்று புதியதாக வாங்கும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்.751 நாள் 08.12.2021–ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 11.01.2022 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table><tr><td></td><td></td><td></td></tr></table></td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 19<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் | சதவீகிதம் |
|---|---|---|
| 1 | லடசுமி ஆட்டோ டீசல் ஓர்கஸ், மேட்டூர் டேம், மோட்டூர் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| 1 | சக்திபாடிஓர்க்ஸ் , பூவிருந்தவல்லி, சென்னை | மதிப்பீட்டை விட 1.32% அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு</u>**

1) மன்றம் அனுமதியளிக்கலாம்

2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1– கண்டுள்ள திருவாளர்.லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ் ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் . 2068/2021/இ1)

---

25.01.2022

**<u>பொருள் எண். 20</u>**

நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள நீர் உறிஞ்சு கிணறு எண்.2 மற்றும் 3 ஆகியவற்றை கூடுதலாக 20எச்.பி நீர்முழுகி மோட்டார்கள் மற்றும் ஸ்டார்டர்கள் 15வது நிதிகுழுமான்யம் (Tied Grant 2021 2022) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் கீழ் ரூ.1000000/– மதிப்பீட்டில் சப்ளை செய்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 751 நாள் 08.12.2021–ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 11.01.2022 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் | சதவீகிதம் |
|---|---|---|
| 1 | RJS Construction<br>எல்,ஆர்.நிலையம்,<br>45, ஒத்தவாடை தெரு, நவல்பூர்,<br>இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட<br>0.06% குறைவு |
| 2 | திருமதி.ஜி.கோமதி | மதிப்பீட்டை விட |

நகர்மன்றத் தீர்மான எண். 20 அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | 24எ, எல்.எப்.ரோடு,<br>பிஞ்சி, இராணிப்பேட்டை | 0.37% அதிகம் |

**அலுவலககுறிப்பு**

1) மன்றம் அனுமதியளிக்கலாம்

2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1– கண்டுள்ள RJS Construction ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் .        /2021/இ1)

---

25.01.2022

**பொருள் எண். 21**

நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திற்கு 30எச்.பி மற்றும் 40 எச்.பி நீர்முழுகி மோட்டார்கள் மற்றும் ஸ்டார்டர்கள் 15வது நிதிகுழுமான்யம் (Tied Grant 2021 2022) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் கீழ் ரூ.1000000/– மதிப்பீட்டில் சப்ளை செய்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்.751 நாள்08.12.2021–ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 11.01.2022 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் | சதவீகிதம் |
|---|---|---|
| 1 | RJS Construction<br>எல்,ஆர்.நிலையம்,<br>45, ஒத்தவாடை தெரு, நவல்பூர்,<br>இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட<br>0.08% குறைவு |
| 2 | திருமதி.ஜி.கோமதி<br>24எ, எல்.எப்.ரோடு,<br>பிஞ்சி, இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட<br>0.29% அதிகம் |

**அலுவலககுறிப்பு**

நகர்மன்றத் தீர்மான எண். 21 அனுமதிக்கப்பட்டது.

1) மன்றம் அனுமதியளிக்கலாம்

2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1– கண்டுள்ள RJS Construction ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.08% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் . /2021/இ1)

25.01.2022

**பொருள் எண். 22**

இராணிப்பேட்டை நகராட்சிப்பகுதியில் கீழ்கண்ட விவரப்படி பணிகள் செய்ய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021– 2022–ன் கீழ் இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.51/2022/இ1 நாள் 10.01.2022ன் படி 25.01.2022 அன்று கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 5 மறறும் 7 கிரேஸ் பள்ளித்தெரு, பெரிய தெரு, மியான்சாகிப் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் கட்டுதல் & காவலர் குடியிருப்பு பகுதியில் 90mm PVC Pipe குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணி. | 4.80 | AVN Construction 1/6, வி.எம்.தெரு, ஆயில்யம் கிராமம் வாலாஜா | மதிப்பீட்டை விட 0.08% குறைவு |
| | | | தணிகைவேல் நெ.50 பிள்ளையார் கோயில் தெரு, காட்டுப்பாக்கம் நெமிலிவட்டம் | மதிப்பீட்டை விட 0.50% அதிகம் |
| 2 | வார்டு எண் 27 பாரிநகர் விரிவு வடக்கு முதல் குறுக்கு தெரு மற்றும் வார்டு எண் 14 TMN தெருக்களுக்கு சிமெண்ட்சாலை, மழைநீர் | 9.90 | AVN Construction 1/6, வி.எம்.தெரு, ஆயில்யம்கிராமம் வாலாஜா | மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| | | | தணிகைவேல் நெ.50 பிள்ளையார் | மதிப்பீட்டை விட |

நகர்மன்றத் தீர்மான எண். 22 அனுமதிக்கப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| | வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி செய்தல். | | கோயில் தெரு, காட்டுப்பாக்கம் நெமிலிவட்டம் | 0.30% அதிகம் |
| 3 | ஆர்,எஸ்.ரோடு வண்டிமேட்டுத்தெரு, மெயின்ரோடு, சந்திப்பு பகுதியில் 70/90 Watts LED தெருவிளக்கு புதியதாக வாங்கி பொருத்தும் பணிசெய்தல். | 9.95 | தணிகைவேல் நெ.50 பிள்ளையார் கோயில் தெரு, காட்டுப்பாக்கம் நெமிலிவட்டம் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| | | | AVN Construction 1/6, வி.எம்.தெரு, ஆயில்யம் கிராமம் வாலாஜா | மதிப்பீட்டை விட 0.29% அதிகம் |
| 4 | இரயில்வே ஸ்டேஷன் தெரு, (இராணிப்பேட்டை நகராட்சியின் முன்பகுதி) வண்டிமேட்டுத்தெரு ஆகிய இடங்களில் புதியதாக புதை கேபிள்கள் அமைத்தல். | 6.50 | தணிகைவேல் நெ.50 பிள்ளையார் கோயில் தெரு, காட்டுப்பாக்கம் நெமிலிவட்டம் | மதிப்பீட்டை விட 0.09% குறைவு |
| | | | AVN Construction 1/6, வி.எம்.தெரு, ஆயில்யம் கிராமம் வாலாஜா | மதிப்பீட்டை விட 0.55% அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு</u>**

1) மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதியளிக்கலாம்
2) திட்ட பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிஉத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண் . 051/2022/இ1)

| | | |
|---|---|---|
| 25.01.2022 | **<u>பொருள் எண். 23</u>** | நகர்மன்றத் தீர்மான |

| | | |
|---|---|---|
| | இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு தினசரி குடிநீர் பாலாறு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பெறப்பட்டு நகராட்சி பகுதிகளில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 9 மேல்நிலை நீர்தேக்க தொட்டி, 3 தரைமட்ட நீர்தேக்க தொட்கள் மூலம் பெறப்பட்டு சுமார் எண்ணிக்கை வால்வுகள் மூலம் பகுதி பகுதியாக பிரிக்கப்பட்டு வால்வுகளை இயக்கி தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இயக்கவும், வால்வுகளை இயக்கவும் நகராட்சியில் போதிய பணியாட்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி கோரி தேவையான பணியாட்களை சப்ளை செய்யும் பணிக்கு ரூ.995000/ மதிப்பீட்டில் ந.க.எண் 021/2021/இ1 நாள் 02.02.2021ல் பணிஉத்திரவு திரு.கே.இராமமூர்த்தி ஒப்பந்ததாரர் அவர்களுக்கு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இவரது பணிகாலம் முடியும் நிலையில் உள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும் தற்போது உள்ளாட்சி தேர்தல் தேதிகள் அறிவிப்பு வெளியாகும் நிலையில் உள்ளதால் ஏற்கனவே பணிசெய்து வரும் ஒப்பந்ததாரர் திரு.கே.இராமமூர்த்தி மூலம் அதே விலை விகிதத்தில் மேலும் மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்து கொள்ளவும் அதற்கான கூடுதல் செலவினம் ரூ.320000/- ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகுறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2) மேற்படி பணிக்கான செலவினம் இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் . 021 /2021/இ1) | எண். 23 அனுமதிக்கப்பட்டது. |
| 25.01.2022 | **<u>பொருள் எண். 24</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சி பகுதிகளுக்கு தினசரி வழங்கப்பட்டு வரும் குடிநீர் பாலாறு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து இயக்கப்பட்டு வருகிறது . இவ்வாறு இயக்கப்பட்டு குடிநீர் விநியோக பணிக்கு போதுமான பராமரிப்பு பணியாட்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால் நகராட்சி பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வது தடைபடும் சூழ்நிலை உருவாகும் எனவே, தனியார் மூலம் தேவையான பணியாட்களை சப்ளை செய்யகோரி ரூ.990000/ மதிப்பீட்டில் 02.02.2021ல் ஒப்பந்ததாரர் திரு.கே.இராமமூர்த்தி அவர்களுக்கு பணிஉத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று முடியும் தருவாயில் இருப்பதால் தற்போது கொரோனா பரவல் காரணமாக பல்வேறு கட்டுப்பாடுகள் தமிழக அரசு நீட்டித்து வருவதாலும், தற்போது உள்ளாட்சி தேர்தல் தேதிகள் அறிவிக்க அதிகம் வாய்ப்பு இருப்பதால் குடிநீர் அத்தியவசிய பணியின் அவசர அவசியம் கருதி மேலும் மூன்று மாதங்களுக்கு அதே ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகிதத்தில் பணியினை தொடர்ந்து மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து கொள்ளவும் அதற்கான கூடுதல் செலவினம் ரூ.250000/- ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகுறிப்பு</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 24 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br><br>2) மேற்படி பணிக்கான செலவினம் இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் . 022 /2022/இ1)</td><td></td></tr>
<tr><td>25.01.2022</td><td><u>பொருள் எண். 25</u><br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை 28 அவர்களின் செயல்முறை உத்திரவில் இராணிப்பேட்டை நகராட்சியில் 15வது நிதிக்குழு 2021–2022 சுகாதார பிரிவு மான்யம் NHM–ன் கீழ் நகர்புற சுகதாரநலமையம்(U–HWC) கட்டடம் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளதின்பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 07.01.2022 அன்று வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் Technical Bid & Price Bid திறக்கப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வரிசை எண்</th><th>ஒப்பந்ததாரர்</th><th>சதவீகிதம்</th></tr>
<tr><td>1</td><td>RJS Construction<br>எல்,ஆர்.நிலையம்,<br>45, ஒத்தவாடை தெரு, நவல்பூர், இராணிப்பேட்டை</td><td>மதிப்பீட்டை விட<br>4.49% அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>KSN Construction.<br>ஆசிரியர்காலனி,<br>குடியாத்தம்.</td><td>மதிப்பீட்டை விட<br>5.03% அதிகம்</td></tr>
</table>
<br><u>அலுவலககுறிப்பு</u><br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br><br>2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1– கண்டுள்ள RJS Construction என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 4.49% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் . /2021/இ1)</td><td>நகர்மன்றத் தீர்மான எண். 25<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>25.01.2022</td><td><u>பொருள் எண். 26</u></td><td>நகர்மன்றத் தீர்மான</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், நகர்புற வளர்ச்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில் தெரிவித்ததற்க்கிணங்க இந்நகராட்சிக்கு சொந்தமான சென்னை–சித்தூர் தேசிய நெடுஞ்சாலையில் (MBT ROAD) NH–4 சாலையை ஒட்டியுள்ள வார்டு டி, பிளாக் எண்.13, நகரளவு எண்.12/1,12/2,12/3–ல் 3.95 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க திட்ட அறிக்கை ரூ.10.25 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு இதற்க்கான நிதி ஆதரங்களுடன் கூடிய அரசாணை எண் (M.S) NO.20 நாள் 25.01.2022 வெளியிடப்பட்டுள்ளது.<br><br>மேலும் இதற்க்கான தொழில் நுட்ப அனுமதி பெற அரசு பொறியியல் கல்லுரிகளில் Feasiblity Report and Justification Report பெறவேண்டியுள்ளதால் இதற்க்கான அரசு பொறியியல் கல்லுரியிலிருந்து பெறவும் இதற்க்கான ஆய்வுக்கட்டணம் செலுத்தவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலககுறிப்பு</u><br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2) மேற்படி பணியின் செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 201/2022/இ1)</td>
<td>எண். 26<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>25.01.2022</td>
<td><u>பொருள் எண். 27</u><br>இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டை நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டப்படும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், நகர்புற வளர்ச்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்டதன்பேரில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான சென்னை–சித்தூர் தேசிய நெடுஞ்சாலையில் (MBT ROAD) தேசியநெடுஞ்சாலையை (NH–4) ஒட்டியுள்ள வார்டு டி, பிளாக் எண்.13, நகரளவு எண்.12/1,12/2,12/3–ல் 3.95 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க மதிப்பீட்டு தொகை ரூ.10.25 கோடிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை (MA.IV) அரசாணை GO (M.S) NO.20 நாள் 25.01.2022 கீழ்கண்ட விவரப்படியான நிதி ஆதரங்களை கொண்டு பணிசெய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>S.No</th><th>Name of the Urban Local Bodies</th><th>Estimate cost as placed in I&A Committee</th><th>Estimate cost now arrived</th><th>Funds from I&A</th><th>Anticipated income through Pre Auction</th><th>Urban Local Bodies share</th><th>TUFIDCO Loan</th></tr>
</table>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான<br>எண். 27<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>Ranipet</td><td>10.68</td><td>10.25</td><td>5.34</td><td>1.50</td><td>--</td><td>3.41</td></tr>
<tr><td></td><td>Total</td><td>10.68</td><td>10.25</td><td>5.34</td><td>1.50</td><td>--</td><td>3.41</td></tr>
</table>
<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>
2) தொழில்நுட்ப அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.201/2020/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>25.01.2022</td>
<td>
<u>பொருள் எண். 28</u><br>
இராணிப்பேட்டை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021-22ன் கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.5 கிரேட் நகர் என்.ஏ.துரைசாமி பூங்கா மேம்படுத்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கையினை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான கட்டணத்தொகை ரூ.41530/- வழங்ககோரி மேற்படி விளம்பரம் செய்த M/S.SRESHTA COMUNICATIONS, CHENNAI-17 நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதிக்கலாம்<br>
2) விளம்பர கட்டணத்தொகை ரூ. 41530/- இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.1776/2021/இ1)
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 28 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>25.01.2022</td>
<td>
<u>பொருள் எண். 29</u><br>
இராணிப்பேட்டை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம்(KNMT) 2021-22ன் கீழ் ரூ.115.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.13 சந்தைமேடு பகுதியில் நுலகத்துடன் கூடிய அறிவுசார் மையம் கட்டடம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கையினை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான கட்டணத்தொகை ரூ.45410/- வழங்ககோரி மேற்படி விளம்பரம் செய்த M/S.SRESHTA COMUNICATIONS, CHENNAI-17 நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<br>
<u>அலுவலக குறிப்பு</u>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 29 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) விளம்பர கட்டணத்தொகை ரூ. 45410/- இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2010/2021/இ1) | |
| 25.01.2022 | **பொருள் எண். 30**<br>இராணிப்பேட்டை நகராட்சி பகுதிகளுக்கு தினசரி குடிநீர் விநியோகம் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியத்தின் மூலமும், நகராட்சிக்கு சொந்தமான பாலாற்று படுகைகளில் உள்ள நீர் உறிஞ்சு கிணறுகளில் இருந்து பெறப்பட்டு நீரேற்று குழாய்களின் மூலம் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் ஏற்றப்பட்டு தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த பருவ மழையின் போது பாலாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரிய பிரதான குழாய்கள் நகராட்சியின் மூலம் ஆற்றில் பதிக்கப்பட்ட நீரேற்று குழாய்கள் வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்டதால் பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவது முற்றிலும் பாதிக்கப்பட்டு உள்ளதால் இதனை தற்காலிகமாக சீர்செய்யும் வகையில் கிணறு எண்.1 மற்றும் 3ல் அடித்து செல்லப்பட்ட குழாய்களுக்கு பதில் 90mm dia HDPE HOSE PIPE அமைத்து குடிநீர் விநியோகம் சீர்செய்யவும் அதற்கான இணைப்பு உதிரி பாகங்களை வாங்கி பொருத்திக்கொள்ளவும் பழுதடைந்துள்ள 7.50HP, 15HP மற்றும் 30HP மின் மோட்டார்களை சீர்செய்து , ரீவெயின்டிங் செய்து பொருத்தவும் ஆகும் தோராய செலவினம் ரூ.150000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**<br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1920 விதி 15ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணியின் செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். /2022/இ1) | நகர்மன்றத் தீர்மான எண். 30 அனுமதிக்கப்பட்டது. |
| 25.01.2022 | **பொருள் எண். 31**<br>இராணிப்பேட்டை புதிய தனி மாவட்டமாக 28.112019-ல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு துவக்க விழாவில் இராணிப்பேட்டையில் நவின புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்து அறிவிப்பை தொடர்ந்து (PPP) Mode-ல் விரிவான திட்ட அறிக்கை மற்றும் சாத்திய கூறுகள் சம்மந்தமான ஆய்வறிக்கைகள் ஆகியவை சேர்ந்து திட்ட மதிப்பீடு ரூ.1025.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெற விரிவான திட்ட அறிக்கை அரசுக்கு மேலனுப்பப்பட்டது. இதனை தொடர்ந்து அரசாணை எண்.(நிலை)20, நாள் 25.01.2022, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை-ன் படி ரூ.1025.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிட்டுள்ளது. மேற்படி தொழில் நுட்ப | நகர்மன்றத் தீர்மான எண். 31 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>அனுமதி பெற திருத்திய விரிவான திட்ட அறிக்கை மற்றும் வரைபடங்கள் தயாரித்து தொழில் நுட்ப அனுமதி பெற கலந்தாலோசகரை நியமனம் செய்து தொழில் நுட்ப அனுமதி மற்றும் TUFIDCO APPRAISAL REPORT FEALIBLITY REPORT ஆகியவை தயார்செய்து TUFIDCO மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குனரகத்தில் சமர்பிக்கவும் அதற்கான உள்ளுர் விலைப்புள்ளி கோரவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்படி பணிக்கு உள்ளுர் விலைப்புள்ளி கோருவதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்க்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 201/2020/இ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>25.01.2022</td>
<td><u>பொருள் எண். 32</u><br>இராணிப்பேட்டை புதிய தனி மாவட்டமாக 28.112019−ல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு துவக்க விழாவில் இராணிப்பேட்டையில் நவின புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்து அறிவிப்பை தொடர்ந்து (PPP) Mode−ல் விரிவான திட்ட அறிக்கை மற்றும் சாத்திய கூறுகள் சம்மந்தமான ஆய்வறிக்கைகள் ஆகியவை சேர்ந்து திட்ட மதிப்பீடு ரூ.1025.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெற விரிவான திட்ட அறிக்கை அரசுக்கு மேலனுப்பப்பட்டது. மேற்படி தொழில் நுட்ப அனுமதி பெற திருத்திய விரிவான திட்ட அறிக்கை மற்றும் வரைபடங்கள் தயாரித்து தொழில் நுட்ப அனுமதி பெற கலந்தாலோசகரை நியமனம் செய்து தொழில் நுட்ப அனுமதி மற்றும் TUFIDCO APPRAISAL REPORT FEALIBLITY REPORT ஆகியவை தயார்செய்து TUFIDCO மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குனரகத்தில் சமர்பிக்கவும், வரப்பெற்ற மூன்று உள்ளுர் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர்</th><th>விலைப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>Glency Docmra Consultants India Pvt Ltd,<br>Plot No.3,Bharathi Nagar,<br>2nd Cross Street ,<br>Madipakkam, Chennai 91</td><td>750000/− + GST 18%</td></tr>
<tr><td>2</td><td>Eclat Designs & Infrastructure Pvt Ltd,<br>Old No.16, New No.20, 5th Cross Street,<br>Lakshmi Nagar,Porur,<br>Chennai 116.</td><td>770000/− + GST 18%</td></tr>
<tr><td>3</td><td>Maxon town Planning 7 Development Pvt Ltd,<br>Majestic Tower (2nd Floor)<br>H.D.Raja Nagar,<br>101, Eldams Road, Teynampet,<br>Chennai 18</td><td>785000/− + GST 18%</td></tr>
</table></td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 32<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணிக்கு நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்காணும் பட்டியலில் வரிசைஎண் 1 ல் கண்டுள்ள Glency Docmra Consultants India Pvt Ltd,Chennai என்பவர் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>4. மேற்படி பணிக்கான செலவினத்தொகை ரூ.885000/- இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். / 2021/இ1) | |
| 25.01.2022 | **<u>பொருள் எண். 33</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் பல்வேறு திட்ட பணிகளுக்காக (புதிய பேருந்து நிலையம் DPR , A3 Drawing, JalJeevan Mission, Knowledge Centre, Park RDMA 8 Formats Vellore Regions போன்ற பணிக்கு கலர் பிரின்டிங், ஜெராக்ஸ், ஸ்பைரல் பைன்டிங், சாப்ட் பைன்டிங் எடுப்பதற்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களுக்கு சமர்பிக்கவும் மேற்படி பணிகளை உடன் செய்து வழங்கியமைக்காக அதற்காகும் தோராய செலவினம் ரூ.7744/- வழங்ககோரி ஸ்ரீகலர் ஜெராக்ஸ் நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்படி பணிக்கான கட்டணத் தொகை ரூ.7744/- இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். /2020/இ1) | நகர்மன்றத் தீர்மான எண். 33 அனுமதிக்கப்பட்டது. |
| 25.01.2022 | **<u>பொருள் எண். 34</u>**<br>சாதாரண உள்ளாட்சி தேர்தல் 2022 அறிவிக்கப்படவுள்ளதால் இராணிப்பேட்டை நகராட்சி நகரமன்ற தேர்தலுக்கு பதிவாகும் வாக்கு பதிவு இயந்திரங்கள் வைப்பதற்க்கான, பாதுகாப்பு அறை ஏற்படுத்துதல் வாக்கு எண்ணும் மையத்திற்கு பேரிகார்டு தடுப்புகள், மேசை நாற்காலி தொடர் மேசைகள், மின்விளக்கு வசதி பார்வையாளர்களுக்கான நாற்காலிகள், ஒளி ஒலி அமைப்பு வசதி செய்தல் ஷாமியானா பந்தல், குடிநீர் வசதி பாதுகாப்பு அறை மற்றும் வாக்கு எண்ணும் மையம் ஆகியவற்றிற்கு இரும்பு வலையிலான தடுப்புகள் மற்றும் தேர்தல் சம்மந்தமான இதர அனைத்து பணிகளையும் மேற்கொள்ளவும் அதற்காகும் | நகர்மன்றத் தீர்மான எண். 34 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தோராய செலவினம் ரூ.990000/-ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2) அவசர அவசியம் பணியின் முக்கியத்துவம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அனுமதி பெற்று உள்ளுர் விலைப்புள்ளிகள் கோரியதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் இந்நகராட்சி அரசிடம் பெறப்படும் தேர்தல் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் . /2022/இ1) | |
| 25.01.2022 | **<u>பொருள் எண். 35</u>**<br>சாதாரண உள்ளாட்சி தேர்தல் 2022 அறிவிக்கப்படவுள்ளதால் இராணிப்பேட்டை நகராட்சி நகரமன்ற தேர்தலுக்கு பின் வாக்கு பதிவு இயந்திரங்கள் வைப்பதற்க்கான, பாதுகாப்பு அறை மற்றும் வாக்கு எண்ணும் மையம் ஆகியவற்றிற்கு சிசிடிவி கோமரா கண்காணிப்பு அமைப்பு ஏற்படுத்துதல் அலுவலக வளாகத்தில் கேட்பு மனுக்கள் பெற உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் அலுவலக வளாகத்தை சுற்றிலும் கண்காணிக்கும் வாக்குச்சாவடி மையங்களுக்கும் தேவையான CCTV கேமரா, தொலைகாட்சி பெட்டி மற்றும் பதிவுகளை நகராட்சி வசம் ஒப்படைக்கவும், மற்றும் தேர்தல் சம்மந்தமான இதர அனைத்து பணிகளையும் மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.900000/-ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2) அவசர அவசியம் பணியின் முக்கியத்துவம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அனுமதி பெற்று உள்ளுர் விலைப்புள்ளிகள் கோரியதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் இந்நகராட்சி தேர்தல் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் . /2022/இ1) | நகர்மன்றத் தீர்மான எண். 35<br>அனுமதிக்கப்பட்டது. |
| 25.01.2022 | **<u>பொருள் எண். 36</u>**<br>நகர்ப்புற சாதாரண உள்ளாட்சி தேர்தல் 2022 அறிவிக்கப்பட உள்ளதைத் தொடர்ந்து, புதியதாக தேர்ந்தெடுக்கப்படும் | நகர்மன்றத் தீர்மான எண். 36 |

| | | |
|---|---|---|
| | நகரமன்ற உறுப்பினர்கள், நகரமன்ற தலைவர் மற்றும் நகரமன்ற துணைத் தலைவர் ஆகியோர் அமர்ந்து நகரமன்றக் கூட்டம் நடத்த ஏதுவாக ஏற்கனவே உள்ள நகரமன்றக் கூடத்தில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் நகரமன்றக் கூடத்தில் 33 எண்ணிக்கைகள் மைக்செட், ஆம்பிளிபையர், கார்ட்லெஸ் மைக்செட் 2 எண்ணிக்கைகள், ஸ்டாண்டிங் மைக்செட் 1 எண்ணிக்கை மற்றும் அவற்றிற்கு தேவையான இணைப்பு உபகரணங்கள் புதியதாக வாங்கி பொருத்தவும் ஒயரிங் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.9,90,000/-ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரவும், குறைந்த விலைப்புள்ளிகள் அளிக்கும் நிறுவனம் / ஒப்பந்ததாரர்கள் மூலம் பணியினை மேற்கொள்ளவும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் பின்னர் கிடைக்கப்பெறும் தேர்தல் நிதியிலிருந்து ஈடு செய்துக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் . /2022/இ1) | அனுமதிக்கப்பட்டது. |
| 25.01.2022 | **<u>பொருள் எண். 37</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாலற்றுப்படுகையிலிருந்தும் நகராட்சி நீரேற்று நிலையத்திலிருந்தும் 50 எச்.பி மற்றும் 60 எச்.பி மின்மோட்டார்கள் மூலம் நீரேற்று குழாய்கள் மூலம் செலுத்தப்பட்டு நகராட்சியின் சந்தை மைதானத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் நீர் ஏற்றப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வாரச்சந்தை மைதானத்தில் உள்ள தரைமட்ட நீர்தேக்கத் தொட்டியில் 40 எச்.பி திறனுள்ள நீர்மூழ்கி மோட்டார் பொருத்தப்பட்டு, பிஞ்சி, முத்துக்கடை, எம்.பி.டி.சாலை மற்றும் ஆட்டோநகர் உள்ளிட்ட பகுதிகளுக்கு குடிநீர் ஏற்றி விநியோகம் செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது 40 எச்பி. மின் மோட்டார் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாலும், மேற்படி மோட்டார் கடந்த 15 ஆண்டுகளாக பயன்பாட்டில் உள்ளதாலும், குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, 40 எச்.பி. மின்மோட்டார், ஸ்டாட்டர் மற்றும் இணைப்பு கேபிள்கள்புதியதாக வாங்கிபொருத்தவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் குடிநீர் பணியின் அவசியம் கருதி, மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 விதி 15-ன் கீழ் பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலககுறிப்பு</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 37 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 1) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினம் இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் . /2022/இ1) | |
| 25.01.2022 | **<u>பொருள் எண். 38</u>**<br>இந்நகராட்சியில் தென்மண்டல தேசிய பசுமைத் தீர்பாயம் நடுவர் அவர்கள் நேராய்வு செய்த போது அறிவுறுத்தியமைக்கிணங்க, இந்நகராட்சியில் இயங்கி வரும் நுண்ணுரமாக்கல் (MCC) கூடங்களில் உருவாக்கும் உரங்களை பிரித்தெடுக்கும் பணிக்கு தானியங்கி ஜல்லடை 2 எண்ணிக்கைகள் புதியதாக வாங்கி பொருத்தி பயன்படுத்தவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.1,80,000/-க்கும் பணியின் அவசர அவசியம் கருதி மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 விதி 15-ன் கீழ் மேற்படி பணிக்கு பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினம் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் . /2022/இ1) | நகர்மன்றத் தீர்மான எண். 38<br>அனுமதிக்கப்பட்டது. |

ஒம்./- பி.ஏகராஜ்,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
இராணிப்பேட்டை நகராட்சி